# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.113/2012

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்பிரமணி | மதம் | : இந்து |
| த/பெ | : பாலு | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : கார்த்திகேயபுரம் மோட்டூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**14.10.2025**

**வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கண்ணய்யா மந்தடி ஜெயராம மந்தடியிடம் இருந்து புலஎண்.215/8ல் 12 செண்ட் கிரையம் பெற்றதாக சொல்லியிருப்பதில் அந்த கிரைய ஆவணத்தை பார்த்தேனா என்றால் இல்லை. அதே புல எண்ணில் 6 செண்ட் நிலத்தை விற்றதாக சொல்லியிருப்பதில் யாருக்கு எந்த தேதியில் விற்றார்கள் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 6 செண்ட் நிலத்தை விற்றதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 12 செண்ட் நிலத்தை எந்த தேதியில் யார் வந்து அளந்தார்கள் என்ற விவரத்தை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 12 செண்ட் நிலத்தை அளந்தபோது 4 செண்ட் அதிகமாக இருந்ததாகவும் அந்த 4 செண்ட் அனாதீனம் என்றும் சொல்லியிருப்பதில் அந்த 4 செண்ட் அனாதீனம் என்பதை காட்ட பட்டா, சிட்டா, அல்லது வேறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. 4 செண்ட் நிலத்தை கண்ணய்யா மந்தடி அனுபவித்து வந்து அதன் பின்பு வெங்கடேசன் அனுபவித்து வந்ததாக சொல்லியிருப்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வெங்கடேசன் பெயருக்கு அவரது அப்பா செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக சொல்லியிருப்பதில் அந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடம் ஜெயவேலுவின்

பட்டா நிலம் என்று சொல்லியிருப்பதில் அதற்கான வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் குடியிருப்பது அனாதீன நிலம் என்றாலும் சரியல்ல. நான் உண்மையில் பட்டா இடத்தில் குடியிருந்தால் அதற்கான பட்டா அல்லது வேறு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் நான் குடியிருப்பது பட்டா நிலமாகும்.

3. ராமசாமி முதலியார் வீட்டு மனை விற்பனை செய்யும்போது சுமார் 1 ஏக்கர் அனாதீன நிலங்களையும் சேர்த்து வீட்டு மனைகள் போட்டு விற்றுவிட்டதாக எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 2ல் சொல்லியுள்ளேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை. அவ்வாறு சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம். இந்த வழக்கில் ஜெயபால் செட்டியை தெரியுமா என்றால் தெரியும். ஜெயபால் செட்டி பதிவு செய்த ஆவணம் மூலம் சொத்தை வாங்கினார் என்றால் அவர் வாங்கியிருப்பார். எனக்கு தெரியாது. ஜெயபால் செட்டி எந்த புல எண்ணில் எந்த சொத்து வாங்கினார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் படிக்கவில்லை எனவே தெரியாது. அனாதீன சொத்தை ஜெயபால் செட்டிக்கு வீட்டு மனையாக ராமசாமி முதலியார் விற்றுவிட்டதாக நான் பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. நான் வழக்கிற்காக வாதிக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)